முதலாவது தேர்ச்சி : இறைத்திட்டத்தை விளங்கி அதற்கேற்ப தமது வாழ்வை அமைத்துக் கொள்வர்

6

## 1.6. இறைத்திட்டத்தில் திருச்சபையின் உதயம்



‘‘எனவே நான் உனக்குக் கூறுகின்றேன்
உன் பெயர் பேதுரு. இந்தப் பாறையின் மேல்
என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின்
வாயில்கள் அதன்மேல் வெற்றிகொள்ளா’’ என்றார்.

(மத்.16:18)

இயேசு இவ்வுலகில் தமது மீட்புப் பணியை ஆரம்பித்தபோது தம் பணிக்கு உதவியாக பன்னிரு சீடர்களைத் தெரிந்தெடுத்து அவர்களைப் பயிற்றுவித்தார். தாம் விண்ணகம் சென்ற பின்னரும் இப்பணி தொடர்ந்து ஆற்றப்பட வேண்டும் என்று விரும்பினார். எனவே தாம் தேர்ந்து கொண்டவர்களுக்குத் தலைவராக பேதுருவை நியமித்து திருச்சபையை வழிநடத்தும் பணியை அவருக்கு வழங்கினார்.

## செயற்பாடு

1. பாறை என்ற பதத்தால் நீர் விளங்கிக் கொள்வதென்ன?
2. இயேசு பன்னிரு அப்போஸ்தலரிலும் பேதுருவானவரை திருச்சபைக்கு தலைவராக நியமிக்கக் காரணம் யாது?
3. பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா என்று இயேசு கூறிய வசனத்தின் பொருள் யாது?

இயேசுக்கிறிஸ்து தாம் உயிர்த்த பின்னர் சீடருக்கு மூன்றாம் முறையாகக் காட்சி கொடுத்த சந்தர்ப்பத்தில் பணிப்பொறுப்பை பேதுருவிடம் ஒப்படைத்தார். அது யோவான் 21:15-17ல் உரையாடலாகத் தரப்பட்டிருப்பதை அவதானியுங்கள்.

இயேசு : யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களை விட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?

பேதுரு : ஆம் ஆண்டவரே எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!

இயேசு : என் ஆட்டுக் குட்டிகளைப் பேணி வளர்.

இயேசு : யோவானின் மகன் சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?

பேதுரு : ஆம் ஆண்டவரே எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!

இயேசு : என் ஆடுகளை மேய்.

இயேசு : யோவானின் மகன் சீமோனே உனக்கு என்னிடம் அன்பு உண்டா?

பேதுரு : ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?

இயேசு : ‘‘என் ஆடுகளைப் பேணி வளர்’’!

இப்பகுதியிலே பேதுருவுக்கு வழங்கப்பட்ட தலைமைத்துவப் பணி மேய்ப்புப் பணியாக வெளிப்படுத்தப்படுகிறது.

**செயற்பாடு :**

1. பேதுருவுக்குத் தலைமைத்துவத்தை வழங்கும் போது இயேசு என்ன கூறினார்?
2. பேதுருவின் முன்மாதிரியைப் பின்பற்றி உமது பாடசாலையில் உமது தலைமைத்துவத்தை எவ்வாறு செயற்படுத்துவீர்?
3. இயேசு பேதுருவுக்கு வழங்கிய பொறுப்புக்களை கிறிஸ்தவனாகிய நீர் இன்று சமுதாயத்தில் எவ்வாறு செயற்படுத்துவீர் என சுருக்கமாக எழுதவும்.

இயேசு தமது உயிர்ப்பின் பின், தமது பணியை சீடருக்கு வழங்கினார்.

இயேசு மீண்டும் அவர்களை நோக்கி ''உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்'' என்றார். இதைச் சொன்னபின் அவர் அவர்கள்மேல் ஊதி, ''தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள், எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவை மன்னிக்கப்படா'' என்றார்.
(யோவான் 20:21-23)

மேலுள்ள திருவிவிலியப் பகுதியில் நாம் அவதானிப்பவை

- தந்தை என்னை அனுப்பியது போல் நானும் உங்களை அனுப்புகிறேன்.''
- பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை இயேசு திருத்தூதர்களுக்கு வழங்கினார்.

எழுபத்திரண்டு சீடர்களை தூதுப்பணிக்கு அனுப்பும்பொழுது இயேசு

> புறப்பட்டுப் போங்கள்; ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவது போல் உங்களை நான் அனுப்புகிறேன். பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம். வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம். நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும், ''இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!'' என முதலில் கூறுங்கள். அமைதியை விரும்புபவர் அங்கு இருந்தால், நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவரிடம் தங்கும்; இல்லாவிட்டால் அது உங்களிடமே திரும்பி விடும். அவர்களிடம் உள்ளதை நீங்கள் உண்டு குடித்து அந்த வீட்டிலேயே தங்கியிருங்கள். ஏனெனில் வேலையாளர் தம் கூலிக்கு உரிமையுடயவரே; வீடு வீடாய்ச் செல்ல வேண்டாம். நீங்கள் செல்லும் ஊரில் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதன் வீதிகளில் சென்று, ''எங்கள் கால்களில் ஒட்டியுள்ள உங்கள் ஊர்த் தூசியையும் உங்களுக்கு எதிராக உதறி விடுகிறோம். ஆயினும் இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்'' எனச் சொல்லுங்கள்.
>
> லூக். 10:3-7,10-11:

## மேற்குறிப்பிட்ட திருவிவிலியப் பகுதி நம்மை அழைக்கிறது.

- கிறிஸ்தவர் நாம் உண்மையான திருத்தூதராவோம்.
- இறைவன் மட்டில் முழுமையான அர்ப்பணத்துடன் செயற்படுவோம்.
- குருத்துவ துறவற அழைப்பிற்காக செபிப்போம்.
- சமுதாயத்தின் பிரச்சனைகளுக்கும் சவால்களுக்கும் மத்தியில் எளிமையான வாழ்க்கை வாழ்வோம்.
- பணத்திற்கும் உலகத்தன்மைக்கும் அடிமையாகாதிருப்போம்.
- எமது சமுதாயத்திற்கு இறைவாக்கினர் ஆகுவோம்.
- தியாக வாழ்வு வாழ்வோம்.
- அமைதியின் தூதுவர்களாவோம்.

தூய ஆவியின் வல்லமையைப் பெற்ற திருத்தூதர்கள் திருச்சபையாக உருப்பெற்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய் உலகெங்கும் நற்செய்தியை அறிவித்தார்கள். திருச்சபையின் தலைவராக கிறிஸ்துவால் நியமிக்கப்பட்ட பேதுருவானவரும் பிரமாணிக்கத்துடன் தமது பணியை ஆற்றினார். அவரைத் தொடர்ந்து அப்போஸ்தலிக்க வழிமரபில் திருத்தந்தையர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்று கிறிஸ்துவின் பணியை ஆற்றி வருகின்றனர். திருச்சபையின் ஆட்சிப் பீடத்திலே இன்று 265வது திருத்தந்தையாக 16ம் பெனடிக்ற் பணி ஆற்றுகிறார்.

## திருத்தந்தை 16ம் பெனடிக்ற்

இறைவன்

இயேசுக்கிறிஸ்து

பேதுரு

திருத்தந்தையர்



**தற்போதைய திருத்தந்தை**
**பதினாறாம் பெனடிக்ற்**

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | ஏப்ரல் 16, 1927 |
| இயற்பெயர் | : | ஜோசப் ரட்சிங்கர் |
| குருப்பட்டம் | : | ஜூன் 29, 1951 |
| பேராயர் | : | மார்ச் 22, 1977 |
| கருதினால்பட்டம் | : | ஜூன் 27, 1977 |
| திருத்தந்தையாகத் தேர்வு | : | ஏப்ரல் 19, 2005 |

## திருத்தந்தையின் பாடல்

எங்கள் ஞானத் தந்தையர்க்கு
இறைவனே ஆசீர் அளித்திடுவீர்

பரமனின் பிரதிநிதியாம் அவரே - எங்கள்
பாப்பரசர் புகழ் ஓங்குகவே
ஒழுக்கமும் உண்மையும் உரைப்பவரே
அதில் வழுவா வரம் கொண்டிருப்பவரே
அதில் வழுவா வரம் கொண்டிருப்பவரே

வெண் பொன் நிறமாம் கொடியுடனே
மண்ணில் விளங்கிடும் அரசாமே
காணும் திருச்சபைத் தலைவர் அவர்
உயர் மாண்பினைப் பாடி புகழ்ந்திடுவோம்
உயர் மாண்பினைப் பாடி புகழ்ந்திடுவோம்

### மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க:

1. இயேசுக் கிறிஸ்துவால் திருச்சபையின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்
   1. யாக்கோபு 2. யோவான் 3. பேதுரு 4. ஸ்தேவான்
2. மந்தைகளை மேய்க்கும்படியாகப் பேதுருவிடம் கூறியவர்
   1. கடவுள் 2. இயேசுக்கிறிஸ்து 3. தூய ஆவி 4. பிலிப்பு
3. தமது தூதுரைப்பணியின்போது 72பேரும் வீடுகளுக்குச் சென்று கூறிய வாழ்த்துக்கள்
   1. அமைதி உண்டாகுக 2. நலமடைவீர்
   3. வெற்றி 4. அருள் பெறுவீர்
4. ''புறப்பட்டுப் போங்கள்; ஓநாய்களிடையே....... அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகிறேன்'' கோடிட்ட இடத்திற்கு பொருத்தமானது,
   1. ஆட்டுக்குட்டிகளை 2.பறவைகளை 3.முயல்களை 4. பாம்புகளை
5. இயேசு தம் சீடர்கள் மீது ஊதி வழங்கியது
   1. தூய ஆவி 2. தீய ஆவி 3. இறைத்தந்தை 4. இறைமகன்
6. இன்றைய திருத்தந்தை
   1. 2ம் அருள் சின்னப்பர் 2. 12ம் பத்திநாதர்
   3. 16ம் பெனடிக்ற் 4. 6ம் சின்னப்பர்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**

1. இயேசு எழுபத்திரண்டு சீடர்களைத் தெரிந்து இருவர் இருவராகப் பணி செய்ய அனுப்பிய போது அவர்களுக்குக் கூறிய அறிவுரைகள் நான்கு தருக.
2. ''திருச்சபை'' என்ற தலைப்பில் நீர் அறிந்தவற்றை 12 வரிகளில் எழுதுக.

**வாழ்க்கைக்கு**

**திருச்சபையில்**
**தலைமைத்துவத்தை**
**மதித்து**
**வாழ்வோம்**